ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | கொடுப்பனவுகள் மற்றும் தீர்ப்பனவுகள் திணைக்களம் |
| திகதி | 2021.10.26 |


## LANKAQR தேசியளவில் பிரபல்யப்படுத்தும் பிரச்சாரம்

நாட்டில் பரவலாகக் காணப்படுகின்ற டிஜிட்டல் கொடுப்பனவு முறையொன்றாக சிறிய மற்றும் நடுத்தர வணிகர்கள் அதேபோன்று நுகர்வோர் மத்தியில் LANKAQR கொடுப்பனவுகளை பிரபல்யப்படுத்தும் நோக்குடன் LANKAQR தேசியளவில் பிரபல்யப்படுத்தும் பிரச்சாரம் இலங்கை மத்திய வங்கியில் 2021 ஒத்தோபர் 25 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் திரு. அஜித் நிவாட் கப்ரால் அவர்களின் அழைப்பின் பேரில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், அபிவிருத்தி கூட்டிணைப்பு மற்றும் கண்காணிப்பு அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான கௌரவ நாமல் ராஜபக்ஷ (பிரதம அதிதி), நெடுஞ்சாலைகள் அமைச்சர் கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து, அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள் மற்றும் இறால்களை வளர்த்தல், கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பல நாள் கடற்றொழில் அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சர் கௌரவ காஞ்சனா விஜேசேகர, விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலையங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கௌரவ டி.வீ சானக ஆகியோரின் பங்கேற்புடன் இந்நிகழ்வு இடம்பெற்றது. பல்வேறு அரசாங்கத் திணைக்களங்களின் மற்றும் நிதியியல் நிறுவனங்களின் பிரதானிகளும் அதேபோன்று சில்லறை, சுகாதார மற்றும் ஊடகத் தொழில்துறைகளின் தலைவர்களும் பிரசன்னமாகியிருந்தனர்.

கௌரவ நாமல் ராஜபக்ஷ அவர்கள், நாட்டிற்கு LANKAQR குறியீட்டுக் கொடுப்பனவுகள் போன்ற டிஜிட்டல் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்துவது தொடர்பில் மத்திய வங்கியைப் பாராட்டியதுடன் டிஜிட்டல் கொடுப்பனவுகளின் எதிர்காலத்தினை நோக்கி இலங்கை வாடிக்கையாளர்களை நகர்த்துவதற்கு அத்தகைய கொடுப்பனவு முறைகளே தேவைமிக்கனவாகவுள்ளன எனக் குறிப்பிட்டார். நாட்டில் இளைஞர்கள் மரபு ரீதியான கொடுக்கல்வாங்கல் முறைகளைத் தொடர்ந்தும் பின்பற்றுவதை விட டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளை நோக்கி நகர்வதற்கு மிகவும் ஆர்வத்துடன் உள்ளார்கள் என்றும் இதனால் இளம் தலைமுறையினர் மத்தியில் LANKAQR மிகவும் பிரபல்யமடையக்கூடுமென தாம் நம்புவதாகவும் அவர் மேலும் விளக்கினார். டிஜிட்டல் கொடுப்பனவுகளை பொதுமக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் பொருட்டு அவற்றை விரைவானதாகவும் செயல்திறன்மிக்கவையாகவும் எளிதானவையாகவும் பாதுகாப்புமிக்கவையாகவும் ஆக்குவது இன்றியமையாதது என ஆளுநர் திரு. அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டார். இலங்கை அனைத்து வடிவிலும் டிஜிட்டல் மயமாக்கத்தினைத் தொடர்ந்தும் தழுவிக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாதையில் LANKAQR முயற்சி ஒரு படிமுறையாகும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

நிகழ்வின் போது வாடிக்கையாளர்களிடமிருந்து பல அரசாங்க மற்றும் சில்லறை நிறுவனங்கள் தற்போது LANKAQR கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்கின்றன என்பதை வெளிக்காட்டும் விதத்தில் LANKAQR சான்றுப்படுத்தப்பட்ட வங்கிகளால் அத்தகைய நிறுவனங்கள் சேவையினை வழங்கத் தொடங்குவது வசதிப்படுத்தப்பட்டது. கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காணப்படுகின்ற தற்போதைய சூழ்நிலையில் பணத்தாள்களைப் பயன்படுத்துவதைக் குறைப்பதும் டிஜிட்டல் கொடுப்பனவு முறைகளை நோக்கி நகர்வதும் ஒருபோதுமில்லாதளவு மிகவும் முக்கியத்துவமிக்கதாகும் என்பதுடன் LANKAQR ஐத் தேசியளவில் பிரபல்யப்படுத்தும்

பிரச்சாரத்தின் மூலம் தமது நாளாந்த கொடுக்கல்வாங்கல்களுக்காக LANKAQR ஐ பொதுமக்கள் மிகவும் அடிக்கடி உபயோகிப்பார்கள் என இலங்கை மத்திய வங்கி நம்புகின்றது.

செல்லிடச் சாதனங்களைப் பயன்படுத்தி வசதியான டிஜிட்டல் கொடுப்பனவுத் தீர்வொன்றை வழங்குகின்ற தேசிய QR குறியீட்டு நியமமாக LANKAQR குறியீடு இலங்கை மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்டதாகும். LANKAQR குறியீட்டினை ஸ்கேன் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்கள் தமது வங்கிக் கணக்கில் இருந்து வணிகர்களின் அல்லது சேவை வழங்குநர்களின் கணக்குகளுக்கு நேரடியாக கொடுப்பனவுகளை மேற்கொள்ளக்கூடியதாகயிருக்கின்றது என்பதுடன் பண கொடுக்கல்வாங்கல்களுக்கெதிராக வாடிக்கையாளர் வசதியினையும் பாதுகாப்பினையும் டிஜிட்டல் கொடுக்கல்வாங்கல்களின் பயன்பாட்டையும் இது ஊக்குவிக்கின்றது. மேலும், LANKAQR, டிஜிட்டல் கொடுப்பனவுகளை ஏற்றுக்கொள்கின்ற செலவு குறைந்த முறையொன்றை வணிகர்களுக்கு வழங்குகின்றது. LANKAQR கொடுக்கல்வாங்கல்களை வசதிப்படுத்துவதற்கு வலையமைப்புச் சேவை வழங்குநராக லங்கா கிளியர் (பிறைவெட்) லிமிடெட்டுடன் இன்று வரை மொத்தமாக 24 மொபைல் செயலிகளுடன் 21 நிதி நிறுவனங்கள் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன.